بسم الله الرحمن الرحيم

# ஜுமுஆ பேருரை

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்**

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்- அல்லாஹ் தனது வல்லமை மிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)

**ஜெர்மனியில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**Summary of the Friday Sermon - 06, June 2014 (Tamil)**

## கட்டுப்படுதலுக்கு ஒட்டகத்தை உதாரணமாகக் கூறியதன் ஞானம்

**தஷஹ்ஹுது, தஅவ்வுஸ், சூரா ஃபாத்திஹா ஆகியவற்றை ஓதிய பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் சூரா காஷியாவின் 18 முதல் 21 வரையுள்ள வசனங்களை ஓதினார்கள். பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

இதில் நான் முதலில் ஓதிய வசனம் أَفَلَا يَنظُرُونَ إِلَى الْإِبِلِ كَيْفَ خُلِقَتْ **(அஃபலா யன்ழுரூன இலல் இபிலி கய்ஃப குலிகத்)** என்பதாகும். (திருக்குர்ஆன் 88:18) அதாவது அவர்கள் ஒட்டகங்களை - அவை எவ்வாறு படைக்கப்பட்டுள்ளன என்று பார்ப்பதில்லையா? இதற்கான விளக்கவுரையில் **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள்** இதன் ஆழமான, அழகிய, இறைஞானம் மிக்க,பிறகு அதை செயல் அளவில் ஒப்புமைப்படுத்தி ஓர் அற்புதமான, தனித்தன்மை வாய்ந்த கருத்தை படம்பிடித்துக் காட்டியுள்ளார்கள். அன்னார் (அலை) இந்த வசனத்திலிருந்து நுபுவ்வத் மற்றும் இமாமத்திற்கு கட்டுப்பட்டு நடக்கும் விவகாரத்திற்கு தீர்வு கண்டிருக்கிறார்கள். நுபுவ்வத் மற்றும் இமாமத்துடன் இணைந்திருப்பவர்களுக்கு அடிப்படையாக இருக்கின்ற முழுமையாக கட்டுப்படுதல் என்பதை அன்னார் (அலை) إِبِل **(இபில்** -ஒட்டகம் அல்லது ஒட்டகங்கள்) என்ற சொல்லுடன் இணைத்து தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். வெளிப்படையில் பார்க்கும்போது ஒட்டகங்களுக்கும் நுபுவ்வத், இமாமத் என்பதற்கும் என்ன தொடர்பு இருக்கிறது? என்பது வியற்பிற்குரியதாக இருக்கிறது. ஆனால் அன்னார் தெளிவுபடுத்தியதிலிருந்து அந்த தொடர்பு பற்றிய வியக்கத்தக்க ஞானம் நமக்கும் தெரிய வருகிறது. அன்னார் (அலை) அவர்களின் விளக்கத்தை முதலில் நான் எடுத்து வைக்கின்றேன். **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

“ أَفَلَا يَنظُرُونَ إِلَى الْإِبِلِ كَيْفَ خُلِقَتْ **(அஃபலா யன்ழுரூன இலல் இபிலி கய்ஃப குலிகத்)** என்ற இந்த (88:18) வசனம் நுபுவ்வத் மற்றும் இமாமத் ஆகிய விஷயத்திற்கு தீர்வு காண்பதற்கு மிகவும் உதவியாக இருக்கிறது. ஒட்டகத்திற்கென்று அரபியில் ஆயிரக்கணக்கான சொற்கள் இருக்கின்றன. அவற்றில் إِبِل **(இபில்)** என்ற சொல்லை தேர்ந்தெடுத்ததில் என்ன இரகசியம் இருக்கிறது? إِلَى الْجَمَلِ **(இலல் ஜமலி**-ஒட்டகம் எவ்வாறு படைக்கப்பட்டுள்ளது என அவர்கள் பார்ப்பதில்லையா?) என்றும் வந்திருக்கலாம் அல்லவா? جَمَل **(ஜமல்)** என்பதும் ஒட்டகத்திற்காகத்தானே கூறப்படுகிறது? உண்மை என்னவென்றால், جَمَل **(ஜமல்)** என்பது ஒரு ஒட்டகத்திற்குக் கூறப்படுகிறது. ஆனால் إِبِل **(இபில்) என்பது பன்மைச் சொல்லாகும்.** இங்கு சமூகத்தை, ஒன்றுபட்ட நிலையைப் படம்பிடித்துக் காட்டுவது அல்லாஹ்வின் நோக்கமாக இருந்தது; ஒட்டகம் என்பதற்காக பயன்படுத்தப்படும் ஜமல் என்ற சொல்லின் மூலமாக இந்த பயன் கிடைக்க முடியாதிருந்தது. எனவே إِبِل **(இபில்)** என்ற சொல்லை விரும்பினான். **ஒட்டகங்களில் ஒன்றை மற்றொன்று பின்பற்றுவதற்கான, கட்டுப்படுவதற்கான ஆற்றல் இருக்கிறது.** பாருங்கள். ஒட்டகங்களின் ஒரு நீண்ட வரிசை இருக்கிறது. அவை எவ்வாறு அந்த ஓர் ஒட்டகத்துக்குப் பின்னால் ஒரு குறிப்பிட்ட முறையிலும் வேகத்திலும் செல்கின்றன! மேலும் முன்னால் உள்ள ஒட்டகம் இமாமாகவும் பின்பற்றப்படக் கூடியதாகவும் இருக்கிறது. அது அநுபவமுள்ளதாகவும் பாதையை அறிந்ததாகவும் இருக்கிறது. பிறகு எல்லா ஒட்டகங்களும் ஒன்றுக்குப் பின்னால் ஒன்று சரிசமமான வேகத்துடன் செல்கின்றன. குதிரை போன்ற மற்ற விலங்குகளின் உள்ளத்தில் இவ்வாறு பின்தொடர்ந்து செல்லும் விருப்பம் இருப்பதில்லை. ஆக, ஒட்டகத்தின் இயல்பில் இமாமைப் பின்பற்றும் விஷயம் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒரு விஷயமாகும். எனவே அல்லாஹ் أَفَلَا يَنظُرُونَ إِلَى الْإِبِلِ **(அஃபலா யன்ழுரூன இலல் இபில்**-அவர்கள் ஒட்டகங்களை - அவை எவ்வாறு படைக்கப்பட்டுள்ளன

என்று பார்ப்பதில்லையா?) எனக் கூறி அதன் ஒட்டுமொத்த நிலையைச் சுட்டிக்காட்டியுள்ளான். ஒட்டகம் ஒரு வரிசைக்கிரமமாக சென்று கொண்டிருப்பதைப் போன்று சமூக நிலையை மற்றும் ஒற்றுமையை நிலைநாட்டுவதற்கு ஓர் இமாம் இருக்க வேண்டும்.

பிறகு இந்த வரிசை பயணத்தின்போது இருக்கிறது என்பதையும் நினைவிற் கொள்ள வேண்டும். எனவே உலக பயணத்தை கடந்து செல்வதற்கும் இமாம் இல்லாத வரை மனிதன் தடுமாறி, தடுமாறி நாசமாகி விடுவான். இதில் சரியான முறையில் வழிகாட்டிக் கொண்டிருப்பதற்கு ஓர் இமாம் இருக்க வேண்டியது அவசியமாகும். மேலும் **ஒட்டகம் அதிகமாக சுமையை எடுத்துச் செல்லக் கூடியதாகவும், அதிகமாக நடக்கக் கூடியதாகவும் இருக்கிறது.** இதிலிருந்து பொறுமை மற்றும் சகித்துக் கொள்ளும் படிப்பினை கிடைக்கிறது. பிறகு ஒட்டகத்தின் சிறப்புப் பண்பு என்னவென்றால், நீண்ட பயணங்களில் பல நாட்களுக்கான தண்ணீரை அது சேமித்து வைக்கிறது. கவனமற்றதாக இருப்பதில்லை. எனவே **நம்பிக்கை கொண்டவர்களும் எல்லா நேரமும் தமது பயணத்திற்காக ஆயத்தமாகவும் எச்சரிக்கையாகவும் இருக்க வேண்டும்.** மேலும் மிகச் சிறந்த பயண உணவு இறையச்சமாகும்.

பிறகு أُنْظُرْ **(உன்ழுர்**-பாருங்கள்) என்ற சொல்லிலிருந்து, இந்தப் பார்த்தல் என்பது குழந்தைகளைப் போன்று பார்த்தல் என்பதல்ல; மாறாக, இதிலிருந்து பின்பற்றுதலுக்கான படிப்பினை கிடைக்கிறது என்பது தெரிய வருகிறது. எவ்வாறு ஒட்டகத்தில் சமூக மற்றும் ஒற்றுமையின் நிலை காணப்படுகிறதோ, அவற்றில் இமாமைப் பின்பற்றும் ஆற்றல் இருக்கிறதோ அதே போன்றுமனிதனும் இமாமைப் பின்பற்றுவதை தனது பண்பாகக் கொள்வது அவசியமாகும். ஏனெனில் மனிதனுக்கு தொண்டு செய்யும் ஒட்டகங்களிடமும் இந்தப் பண்பு காணப்படுகிறது. ஆக, كَيْفَ خُلِقَتْ **(கய்ஃப குலிகத்**-அவர்கள் ஒட்டகங்களை - அவை எவ்வாறு படைக்கப்பட்டுள்ளன என்று பார்ப்பதில்லையா?) என்பதில் اِبِلْ **(இபில்**-ஒட்டகம்) என்பதன் ஒட்டுமொத்தமான நிலையிலிருந்து கிடைக்கும் அனைத்து பயன்களும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.''

எனவே இந்தக் காலத்தில் அல்லாஹ் தனது வாக்குறுதிகள் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்புகளுக்கேற்ப வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அவர்களை அனுப்பியுள்ளான். மேலும் அவர்களை ஏற்றுக் கொள்ளும் நல்வாய்ப்பையும் நமக்கு வழங்கியிருக்கிறான். பிறகு அன்னாருப் பின்னர் தொடரும் கிலாஃபத்தையும் வழங்கியிருக்கிறான். நாம் இந்த அருட்கொடைக்கு மதிப்பளிக்க வேண்டும். மேலும் கிலாஃபத் அமைப்பில் இருக்கும் ஆன்மாவைப் புரிய வேண்டும். 'இமாம் கேடயமாவார்' என **ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.** எனவே நீங்கள் அந்த கேடயத்திற்குப் பின்னால் இருப்பீர்கள் என்றால் தப்பிப்பதற்கான வழி இருக்கிறது. கேடயத்திற்குப் பின்னால் இருப்பது என்பது அவருக்கு முழுமையாகக் கட்டுப்படுங்கள்; உங்களுக்காக நிர்ணயிக்கப்பட்ட வரிசையில் செல்லுங்கள். அதை விட்டும் கொஞ்சம் வெளியே சென்றாலும் வழி தவறிச் செல்லும் அபாயம் இருக்கிறது என்பதேயாகும். பிறகு கட்டுப்படுவதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்தக் கட்டளையையும் நினைவிற் கொள்ள வேண்டும்: وَمَنْ أَطَاعَ أَمِيرِى فَقَدْ أَطَاعَنِى وَمَنْ عَصَى أَمِيرِى فَقَدْ عَصَانِى **(வமன் அதாஅ அமீரீ ஃபகத் அதாஅனீ. வமன் அஸாஅ அமீரீ ஃபகத் அஸானீ)** (ஆதாரம்: புகாரி, முஸ்லிம், நஸாயீ, முஸ்னது அஹ்மது பின் ஹம்பல்) அதாவது எவர் எனது அமீருக்குக் கட்டுப்பட்டாரோ அவர் எனக்குக் கட்டுப்பட்டவராவார். மேலும் எவர் எனது அமீருக்குக் கட்டுப்படவில்லையோ அவர் எனக்குக் கட்டுப்படவில்லை.

அமீருக்குக் கட்டுப்படுவது பற்றி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இன்னும் பல வழிகாட்டல்கள் இருக்கின்றன. அவ்வாறே திருக்குர்ஆனிலும் பல்வேறு இடங்களில் பின்பற்றுதல் மற்றும் கட்டுப்படுதல் பற்றிய கட்டளைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் இந்த இரகசியத்தை அறிந்து கொள்வதுதான் ஜமாஅத்தின் முன்னேற்றத்திற்கு மிக அவசியமானதாகும். ஜமாஅத்துடன் தொடர்பு கொண்ட ஒவ்வொருவரும் அறிந்து கொள்வது அவசியமாகும். **குறிப்பாக இன்றைய காலத்தில் சுதந்திரம் என்ற பெயரில், நாம் ஏன் கட்டுப்பட வேண்டும்? நம் மீது ஏன் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன? என்ற தவறான சிந்தனைகள் வெளிப்படுத்தப்படுகின்ற இந்த நேரத்தில் ஜமாஅத் உறுப்பினர்கள் இந்த விஷயத்தை அறிந்து கொள்வது மிக அவசியமானதாகும்.**

நான் பொறுப்பாளர்களுக்கும் கூறுகிறேன்: நீங்கள் ஜமாஅத்தின் முன்னேற்றத்திற்கு ஒத்துழைப்பும், உதவியும் செய்ய வேண்டும் என்றால், பெருமைக்காக பொறுப்புகளைப்

பெறவில்லையென்றால், தன்னை வெளிப்படுத்திக் காட்டுவதற்காக பெறவில்லை என்றால், தனது **'தான்'** என்ற அகந்தைக்கு ஆறுதல் வழங்குவதற்காகப் பெறவில்லை என்றால், கட்டுப்படுதலின் கருத்தைப் புரிவதற்கான அதிக தேவை பொறுப்பாளர்களுக்கு இருக்கிறது. எல்லா வகையான பொறுப்பாளார்களுக்கும் இருக்கிறது. பொறுப்பாளர்கள் இந்தக் கருத்தைப் புரிந்து விட்டால், ஜமாஅத் சகோதரர்கள் தாமாகவே இதன் பக்கம் கவனம் செலுத்துவார்கள். மேலும் எல்லா மட்டத்திலும் கட்டுப்படுதலின் முன்மாதிரிகள் நமக்குத் தென்படும். அனைவரும் ஒட்டகங்களின் வரிசையைப் பின்பற்றியவாறு நமக்குத் தென்படுவார்கள். ஒரே திசையில் செல்வதை நாம் காண்போம். இமாமின் காலடியுடன் காலடியை வைத்தவாறு பின் தொடர்வதைக் காண்போம். **எனவே அமீரும், தலைவரும், மற்ற பொறுப்பாளர்களும் காலத்தின் கலீஃபாவிடமிருந்து வருகின்ற எல்லா கட்டளைகளின்படியும் எவ்வித சாக்குப்போக்குமின்றி செயல்படுத்திக் கொண்டிருக்கும் அளவிலான கட்டுப்படும் தகுதி தம்மிடம் இருக்கிறதா? அல்லது அந்த கட்டளைகளில் சுய விளக்கங்களைப் பெற முயற்சி செய்கின்றார்களா? என ஆய்வு செய்து பார்க்க வேண்டும். அவர்கள் சுய விளக்கங்களைப் பெற முயற்சி செய்கிறார்கள் என்றால் அது கட்டுப்படுதல் அல்ல.**

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் நடந்த ஒரு சம்பவத்தைப் பற்றி அறிவிப்பில் வருகிறது:** ஒருமுறை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் பள்ளிவாயிலில் உரையாற்றிக் கொண்டிருக்கும்போது, உட்காருங்கள் எனக் கூறினார்கள். அப்போது வழியில் சென்று கொண்டிருந்த நபித்தோழர் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது (ரலி) அவர்கள் அங்கேயே உட்கார்ந்து விட்டார்கள். இந்தக் கட்டளை பள்ளியில் அமர்ந்திருப்பவர்களுக்குத்தானே என அவர்கள் கருதவில்லை. குரலைக் கேட்டதும் உட்கார்ந்து விட்டார்கள். உட்கார்ந்தவாறே மிகவும் கஷ்டப்பட்டு தவழ்ந்து சென்றவாறு பள்ளிவாயிலை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள். நீங்கள் ஏன் இவ்வாறு தவழ்ந்து சென்று கொண்டிருக்கிறீர்கள் என ஒருவர் கேட்டார். அதற்கு ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது (ரலி) அவர்கள், உட்காருங்கள் என உள்ளேயிருந்து ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் குரல் வந்தது. நான் உட்கார்ந்து விட்டேன் எனக் கூறினார்கள். அதற்கு கேள்வி கேட்டவர், அந்தக் கட்டளை உள்ளே உட்கார்ந்திருப்பவர்களுக்குத்தானே என்றார். அதற்கு அந்த சஹாபி, அந்தக் கட்டளை உள்ளே இருப்பவர்களுக்கா? அல்லது வெளியே இருப்பவர்களுக்கா? அல்லது அனைவருக்குமா? என்பதைப் பற்றி எனக்கு கவலை இல்லை. எனது காதில் அல்லாஹ்வின் தூதரின் ஓசை கேட்டது; நான் கட்டுப்பட்டு விட்டேன். அவ்வளவுதான். அதுவே எனது நோக்கம் என்றார்.

எனவே கட்டுப்படும் இத்தகைய தகுதியைத்தான் நாம் பெற வேண்டிய தேவை இருக்கிறது. **சில பொறுப்பாளர்கள் காலத்தின் கலீஃபாவிடமிருந்து வரும் கட்டளைகளின்படி செயல்படுகிறார்கள்தான். ஆனால் மிக மனமில்லாமல் செய்கிறார்கள்: விருப்பமில்லாமல் அதைச் செய்கிறார்கள். விருப்பமில்லாமல் செய்வதென்பது கட்டுப்படுதல் ஆகாது.** மனம் விரும்பி உடனே செய்வதுதான் கட்டுப்படுதல் ஆகும். தனக்கென்று ஒரு கருத்தைக் கொண்டிருப்பது ஒன்றும் தவறானதல்ல. ஆனால் ஏதாவதொரு விஷயத்தைப் பற்றி இப்படிச் செய்யுங்கள் என கலீஃபாவின் கட்டளை வந்து விட்டால் பிறகு தனது கருத்தை முற்றிலும் மறந்து விடுவது அவசியமாகும்.

**ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் கூறினார்கள்:** நான் சில விவகாரங்களில் எனது (சொந்த) கருத்தைக் கொண்டிருக்கின்றேன். மேலும் என் சார்பாக சான்றுகளுடன் (இரண்டாவது) கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுக்கு முன்னால் எடுத்துரைக்கிறேன். ஆனால் எனது கருத்தை அவர்கள் மறுத்து விட்டால் ஏன் அந்த கருத்து மறுக்கப்பட்டது என்றோ அல்லது எனது கருத்து எதுவாக இருந்தது என்றோ எனக்கு ஒருபோதும் சிந்தனை தோன்றியதில்லை. பிறகு காலத்தின் கலீஃபா அவர்களின் கருத்தே எனது கருத்தாக மாறி விடுகிறது. பின்னர் முழுமையான கட்டுப்படுதலுடன் காலத்தின் கலீஃபா சொன்ன அந்தக் கட்டளையை நிறைவேற்றுவதில் நான் ஈடுபட்டு விடுகிறேன்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

''நீராட்டப்படுபவரைப் போன்று உங்களை இமாமின் கையில் கொடுத்து விடுங்கள். எவ்வாறு இறந்தவர் தன்னைத்தானே இங்குமங்கும் மாற்ற முடியாதோ, இயக்க முடியாதோ அவரை நீராடுபவரே இயக்குகின்றாரோ அவ்வாறே முழுமையாக கட்டுப்படுபவரது கடமை என்னவென்றால், அவர் தன்னை இமாமின் கையில் கொடுத்து விட வேண்டும்.''

இந்த தகுதியை அடையும்போதுதான் பைஅத்தின் உறுதிமொழியை நிறைவேற்றுபவர்களாக முடியும். அப்போதுதான் அல்லாஹ்வும் ரஸூலும் கூறிய கட்டுப்படுதலின் தகுதிகளைப் பெறுபவர்களாக ஆக முடியும். எனவே நம்மில் பைஅத் செய்த ஒவ்வொருவரும் இந்த சிந்தனையை உருவாக்குவது மட்டுமின்றி, தமது செயலால் அதனை நிரூபித்துக் காட்ட வேண்டியது வரும். நமது முன்மாதிரியை வரக் கூடியவர்களுக்காகவும், நமது சந்ததிகளுக்காகவும் காட்ட வேண்டிய தேவை இருக்கிறது. அதாவது, பெரியவர்கள் தமது முன்மாதிரியைக் காட்ட வேண்டும். அவர்களின் குழந்தைகள், இளைஞர்கள் அதைப் பார்த்து கற்றுக் கொள்ள வேண்டும். இந்த தகுதியை எல்லாரையும் விட அதிகமாக மேல் மட்டத்திலிருந்து கீழ் மட்டம் வரையுள்ள பொறுப்பாளர்கள் காட்ட வேண்டியது வரும்; நிலைநாட்ட வேண்டியது வரும்.

இங்கு சில நேரத்தில் சிலருடைய சிந்தனையில், முழுமையான முறையில் பின்பற்றுவது நஷ்டத்தைத் தருவதாகும் என்ற கேள்வி எழுகிறது. எனக்கு கிடைத்திருக்கும் இந்த செய்தி உண்மை என்றால், இந்த சிந்தனை அவர்களிடம் ஏன் ஏற்படுகிறதென்றால், ஜெர்மனியில் ஹிட்லர் தனது கட்டளையை ஏற்றுக் கொள்ள வைத்தார்; மேலும் இரண்டாவது உலகப் போரில் சர்வாதிகாரியாக செயல்பட்டார் என்ற ஒரு சிந்தனை ஜெர்மனிய மக்களிடம் காணப்படுகிறது. எனவே நான் நமது ஜெர்மனியில் வாழ்கின்ற, ஜெர்மனிக்கு வருகின்ற ஒவ்வோர் இளைஞரிடமும் தெளிவுபடுத்த விரும்புகிறேன்: **இமாமத், கிலாஃபத் என்பதற்கும் சர்வாதிகாரம் என்பதற்கும் இடையில் மாபெரும் வித்தியாசம் உள்ளது.** கிலாஃபத் என்பது காலத்தின் இமாமை ஏற்றுக் கொண்டதற்குப் பிறகு நிலைநாட்டப்பட்டிருக்கிறது. மேலும் அல்லாஹ்வின் வாக்குறுதிக்கேற்ப நிலைநாட்டப்பட்டுள்ளது. மேலும் நாங்கள் கிலாஃபத்தின் அமைப்பை நிலைபெறச் செய்வோம் என நம்பிக்கை கொண்ட ஒவ்வொருவரும் உறுதிமொழி ஏற்கிறார். மார்க்கத்தில் எவ்வித கட்டாயமுமில்லை. தனது விருப்பத்தினால் மார்க்கத்தை ஏற்றுக் கொண்ட பிறகு மார்க்கத்தை நிலைபெறச் செய்வதற்கு அந்த உடன்படிக்கையை நிறைவேற்றுவதும் அவசியமாகும். கிலாஃபத்தை நிலைநாட்டுவதற்காக – சமுதாய ஒற்றுமைக்காக ஒருமைப்பாட்டிற்காக ஒவ்வோர் அஹ்மதியும், தான் எடுக்கும் உறுதிமொழியில் நிலைபெற்றிருப்பதும் அவசியமாகும்.

பிறகு கிலாஃபத்தின் நோக்கம் படைப்பினங்களுக்கான சேவையை நிறைவேற்றுவதில் முழுமையாக கவனம் செலுத்துவதாகும். பிறகு ஓர் இறை கொள்கையை நிலைநாட்டுவதற்கான முழுமையான முயற்சியும் கிலாஃபத்திற்கான பணியாகும். உலக தலைவர்களுக்கு உலக நோக்கங்கள்தான் இருக்கின்றன. தமது நாட்டு எல்லைப் புறங்களை அதிகப்படுத்துவதுதான் அவர்களுடைய வேலை. எந்த சர்வாதிகாரி தமது நாட்டு மக்களுடன் சொந்த தொடர்பு கொண்டுள்ளார்? காலத்தின் கலீஃபாவுக்கு உலகத்தில் பரவியுள்ள ஒவ்வொரு சமுதாயத்துடன், ஒவ்வொரு சந்ததிகளைச் சேர்ந்த அஹ்மதிகளுடன் சொந்த தொடர்பு இருக்கிறது. அவர்களின் சொந்த கடிதங்கள் (கலீஃபாவுக்கு) வருகின்றன. அவற்றில் அவர்களின் சொந்த விவகாரங்கள் இருக்கின்றன. நாள்தோறும் வருகின்ற இந்த கடிதங்களைப் பார்த்தாலே உலகவாதிகளுக்கு இது நம்பமுடியாத ஒன்றாகும். கிலாஃபத் மட்டும்தான் உலகத்தில் வாழ்கின்ற ஒவ்வோர் அஹ்மதியின் துன்பத்தின் மீது கவனம் செலுத்துகிறது. அவர்களுக்காக காலத்தின் கலீஃபா துஆ செய்கின்றார்.

**நோயாளிகளுக்காக துஆவும் செய்கின்ற உலக தலைவர் யார்? தனது சமுதாயத்தின் பெண் பிள்ளைகளின் திருமணத்திற்காக நிம்மதியிழந்தவாறு துஆ செய்கின்ற உலக தலைவர் யார் இருக்கிறார்? குழந்தைகளின் கல்விக்காக கவலை கொள்ளும் தலைவர் யார் இருக்கிறார்?** அஹ்மதிய்யா ஜமாஅத்தின் உறுப்பினர்கள்தான் நற்பேறு பெற்றவர்கள். அவர்கள் கல்வி கற்க வேண்டும் என்ற கவலை காலத்தின் கலீஃபாவுக்கு இருக்கிறது. அவர்களின் உடல் நலம் பற்றிய கவலை கலீஃபாவுக்கு இருக்கிறது. சுருக்கமாக, உலகத்தில் பரந்து இருக்கின்ற அஹ்மதிகளின் எந்தவொரு பிரச்சனை பற்றியும் காலத்தின் கலீஃபாவின் பார்வையில் இல்லாமல் இல்லை.(அதாவது ஒவ்வொரு பிரச்சனை பற்றியும் காலத்தின் கலீஃபாவின் பார்வையில் இருக்கிறது.) மேலும் அதனைத் தீர்ப்பதற்காக (கலீஃபாவாகிய) அவர் செயல் அளவிலான முயற்சியுடன் அல்லாஹ்விடம் குனிகின்றார். அவனிடம் துஆ கேட்கின்றார். நானும் அதைதான் செய்துகொண்டிருக்கின்றேன்; எனக்கு முன்னுள்ள கலீஃபாக்களும் அதைத்தான் செய்து கொண்டிருந்தனர். இரவு தூங்குவதற்கு முன்னர் என் சிந்தனைக் கண் முன்னால் வராத எந்தவொரு நாடும் உலகில் இல்லை. அவர்களுக்காக நான் தூங்கும்போதும், விழித்திருக்கும்போதும் துஆ செய்கின்றேன். ஏதோ நான் நன்மை செய்கிறேன் என்பதை பறைசாற்றுவதற்காக நான் இதைக் கூறவில்லை; இது எனது கடமையாகும். இதை விட அதிகமாக கடமையை நிறைவேற்றுபவனாக

அல்லாஹ் என்னை ஆக்குவானாக. நான் சொல்ல வந்த கருத்து, **கிலாஃபத்தையும் உலக தலைவர்களையும் ஒப்பிட்டுப் பார்க்கவே முடியாது.** அது பொதுவாகவே தவறானதாகும். சில நேரத்தில் நான் உலக தலைவர்களுடன் பேசும்போது எனக்கு வரும் கடிதங்க (ளின் எண்ணிக்கை) ளைப் பற்றிக் கூறும்போதே அவர்கள், இது எப்படி முடியும்? என வியப்படைகின்றனர்.எனவே (கலீஃபாவிற்கும், உலக தலைவருக்கும் உள்ள) ஒப்பீடு என்பதற்கான கேள்விக்கே இடமில்லை. ஜமாஅத் அதிகமாகும்போது நயவஞ்சகர்களும் தமது வேலையை செய்ய விரும்புகின்றனர். பொறாமைக்காரர்களும் தமது வேலையை செய்ய விரும்புகின்றனர். அவர்களின் சதித்திட்டங்களை எல்லா வகையிலும் தோல்வியுடையதாக ஆக்குவதே கிலாஃபத்துடன் நீங்கள் கொண்டிருக்கும் உண்மையான நன்றியுணர்வாகும். மேலும் கிலாஃபத்தின் மீது தவறான எண்ணங்களை உருவாக்க சிலர் முயற்சி செய்கின்றனர். அவர்களை உங்களை நெருங்கவும் விடாதீர்கள்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

'' கட்டுப்படுதல் எத்தகையது என்றால், அதை உண்மையான உள்ளத்துடன் மேற்கொண்டால் உள்ளத்தில் ஓர் ஒளி மற்றும் ஆன்மாவில் ஓர் இன்பம் மற்றும் ஒளி வருகின்றது. **கட்டுப்படுவது எவ்வளவு தேவையோ அந்த அளவுக்கு முயற்சிகளுக்கான தேவை இல்லை!** (அதாவது முயற்சிகளை விட கட்டுப்படுவது அதிக தேவையாகும்.) ஆயினும் உண்மையான கட்டுப்படுதலாக இருக்க வேண்டும் என்பது நிபந்தனையாகும். **அதுதான் கஷ்டமான ஒன்றாகும். கட்டுப்படுதலில் தனது மன விருப்பத்தை பலியிடுவது அவசியமானதாகும். அது இல்லாமல் கட்டுப்படுதல் என்பது நடக்கவே முடியாது.''**

எனவே முழுமையான முறையில் காலத்தின் கலீஃபா அவர்களுக்கு கட்டுப்படுவீர்கள் என்றால். பின்பற்றுவீர்கள் என்றால் காலத்தின் கலீஃபாவிடமிருந்து கிடைக்கும் வழிகாட்டல்களின் படியும், கட்டளைகளின்படியும் செயல்படுவீர்கள் என்றால், அந்த கட்டளைகளுக்கு சுய விளக்கங்கள் கொடுப்பதை நிறுத்தி விடுவீர்கள் என்றால் அல்லாஹ்வின் திருப்தியைப் பெற்றவாறு அறிவும் ஞானமும் பயனைத் தரும்;கனியைத் தரும்.

நேற்று **Wiesbaden** (வெஸ்பெடன்)-ல் பள்ளிவாயிலுக்கான அடிக்கல் நாட்டப்பட்டது. 400 - க்கும் அதிகமான அங்குள்ள உள்ளூர் மக்கள் வந்திருந்தனர். ஜெர்மனியைச் சேர்ந்த விருந்தினர்கள் வருகை தந்திருந்தனர். நான் இஸ்லாமிய போதனைகளைப் பற்றி சுருக்கமாக எடுத்துரைத்தேன். **இந்தத் தூதுச் செய்தி நம் அனைவருடைய உள்ளத்தின் குரலாகும் என்றே ஒவ்வொருவரும் கூறினர்.** மேலும் இன்று நமக்கு இஸ்லாத்தைப் புரிந்து கொள்வதற்கான வாய்ப்பு கிடைத்தது எனக் கூறினர். எனவே நாம் அல்லாஹ்விடம் உதவியை தேடியவாறு கலப்பற்ற முறையிலும், நன்றியுணர்வோடும் நமது பணியைச் செய்து கொண்டிருந்தால் (ஜெர்மனிய மக்களாகிய) இவர்களிலிருந்து அல்லது இவர்களின் சந்ததிகளிலிருந்து மக்கள் இஸ்லாத்தைப் புரிந்து கொள்வார்கள்; இஸ்லாத்தில் இணைவார்கள். அல்லாஹ் விரும்புபவர்களுக்கு ஏற்றுக் கொள்ளும் நல்வாய்ப்பை வழங்குவான். எனவே அச்சப்பட வேண்டிய தேவையில்லை; கவலைப்பட வேண்டிய தேவையில்லை; தயங்க வேண்டிய தேவையில்லை. அச்சமும் பயமும் வெளிப்படும் பதிலை சொல்ல வேண்டிய தேவையில்லை. உலக அரசாங்கங்கள் நமது நோக்கமும் அல்ல; நமக்கு அதன் தேவையுமில்லை. அல்லாஹ்வின் அன்பை உள்ளங்களில் அமர்த்த வேண்டியதும் அவனுக்கு முன்னால் குனிய வைப்பதும் நமது பணியாகும். மேலும் இந்தப் பணியை நாம் செய்து கொண்டே செல்வோம் - இன்ஷா அல்லாஹ்.

எனவே இந்தப் பணியைச் செய்வதற்கு - இந்த நோக்கத்தைப் பெறுவதற்கு ஒவ்வோர் அஹ்மதியும் கிலாஃபத்துக்கு முழுமையாக கட்டுப்படும் பண்பை உருவாக்க வேண்டிய தேவை இருக்கிறது. அல்லாஹ் நம் அனைவருக்கும் அதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக.

**Nazarath Nashr-o-Isha'ath, Qadian** **Translated By** ***O.M. Muzzammil Ahmad***